**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4413

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.08.2021

Accepted: 15.09.2021

Published: 01.10.2021

Citation:
Raja, A. "Markkaal in the Tradition of Ancient Tamils Metrology." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 64–69.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4413

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Markkaal in the Tradition of Ancient Tamils Metrology

**Dr. A. Raja**

*Head, Department of Museum, Tamil University, Thanjavur, Tamil Nadu*

http://orcid.org/0000-0001-8820-2413

**Abstract -** Agriculture was the primary occupation in the life of the ancient Tamils. The mugatha lalavai measuring tool used to measure the resulting grains of paddy is marakkaal. This instrument is one of the most ancient metrological tools of the Tamils. The purpose of this article is to explore and explain the development and singificance of Marakkaal in religious, ritualistic belief and practices in the society.

**Keywords:** Marakkaal in history and mythology, Marakkaal in rituals, Marakkaal in Worship and cultural practices, Mukaththalalavai – Marakkaal, Marakkaal in social use

**References**

1. Kanthasamy, N. (1967). *Sengottu pallu*. pazhaku thamizh pathibbagam, Mallasamuthiram.
2. Kovintharajan, C. (1987). *Kalvettu kalaichchol agaramuthali*, M.K.University, Madurai
3. Nattarasan kottai Nagaraththaar, (1938), Kannudaiyamman pal, Sri Rajeshwari press, Sivagangai.
4. Poominathan, T. (2000), *Ettaiyapurap pallu*. Chennai, Ulaga thamizhaaraachchi niruvanam, .
5. Raman, K.V. *Chozhargal part 2*. Chennai, New Centuray book house (P) Ltd.,
6. Saminathaiyar, V. (1969). *Seevagasinthamani moolamum Nachchinarkkiyaruraiyum*, Chennai, Kapeer Press.
7. Senthan Thivagaram. (2004). *Bingalam*, Chennai, Santhi sathan publication.
8. Senthan Thivagaram. (2004). *Soodaamani*, Chennai, Santhi sathan Publication.
9. Somasundaranar, P.V. (1961). *Ingurunooru*, Chennai, Kazhaga Publication.
10. Thamizh peragarathi I-VI. (1982). Chennai, Madras University.
11. Theenathayalu Naid, T. (1943). Naaladiyar Urai, Chennai, P.N.Chidambara mudaliyar brothers.

# பழந்தமிழர் அளவையியல் மரபில் மரக்கால்

*முனைவர் ஆ. ராஜா*
தலைவர், அருங்காட்சியகத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ் நாடு, இந்தியா

***ஆய்வுச் சுருக்கம்***
*வேளாண்மை பண்டையத் தமிழர் வாழ்வியலில் முதன்மைத் தொழிலாகும். இதன் வாயிலாக விளைந்த நெல் முதலானத் தானியங்களை முகந்து அளப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட முகத்தலளவைக் கருவி மரக்காலாகும். இக்கருவி தமிழர்களின் தொன்மையான அளவையியல் மரபுசார்ந்தக் கருவிகளில் ஒன்று. இது சமய, சடங்கு நம்பிக்கைகளிலும், பண்பாடுப்பழக்க வழக்கங்களிலும் சமூகத்தில் அடைந்த வளர்ச்சி, அதன் முக்கியத்துவம், பயன்பாடுகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *வரலாறு மற்றும் புராணங்களில் மரக்கால், சடங்கு முறைகளில் மரக்கால், வழிபாடு, பண்பாட்டுப் பழக்கவழக்கங்களில் மரக்கால், முகத்தலளவை-மரக்கால் , சமூகப் பயன்பாடுகளில் மரக்கால்.*

## தொடக்கவுரை

பண்டைக் காலத்தில் பழந்தமிழ்ச் சமூகம் கை, கால்களை அளவுக் கருவிகளாகப் பயன்படுத்தியது. இவற்றில் கை முகத்தல் அளவு முறைக்கும் கால் நீட்டல் அளவு முறைக்கும் பயன்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாகக் கைகளில் ஒரு பொருளை அள்ளுதல், பிடித்தல், தூக்குதல் ஆகியவற்றைக் கை அளவு முறை எனலாம். தாண்டுதல் மற்றும் நடத்தல் (பாதத்தின் எண்ணிக்கை அடிப்படையில்), தடி, கோல், சாண் போன்றவற்றை நீட்டல் அளவு முறை எனலாம். இவற்றில் முகத்தல் அளவையியலில் முதலில் மண் கலத்தைப் பயன்படுத்தினர். பின்னர் மரத்தால் ஆன உழக்கு, மரக்கால் முதலான அளவுக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறான அளவையியல் மரபுசார் கருவிகளை எண்ணல், நிறுத்தல், முகத்தல் என வகைப்படுத்தலாம். இவற்றில் முகத்தலளவைக் கருவி என்பது நெல் முதலான தானியங்களை முகந்தெடுத்து அளக்கப் பயன்படுத்துவதாகும். இதற்கு நெல்லிலக்கம் என்னும் வேறொரு பெயரும் உள்ளது. நெல்லை மிகுதியும் கொண்டு இம்முகத்தல் அளவை அளக்கப்படுவதால் இப்பெயர் பெறுகிறது. ஆழாக்கு, உழக்கு. நாழி, உரி, மரக்கால், பறை என முகந்து அளக்கக்கூடியக் கருவிகள் பல உள்ளன. அவற்றுள் மரக்கால் எனும் பழந்தமிழர் மரபுசார் முகத்தலளவைக் கருவியைப் பற்றி விளக்குகிறது இக்கட்டுரை.

## மரக்கால்

மரக்கால் எனும் சொல்லை மரம் + கால் என்று பிரிக்கலாம். மரம் என்பது மரத்தினையும் கால் என்பது அளவு முறையையும் குறிக்கிறது. கால் எனும் சொல் நான்கில் ஒரு பாக அளவை குறிப்பதாகும். சூடாமணி நிகண்டானது (11:225) இச்சொல் மரக்காலைக் குறிக்கும் எனக் குறிப்பிடுகிறது. பல்லவர் மற்றும் சோழர் ஆட்சி காலங்களில் கால் எனும் சொல் வழக்கில் இருந்ததாகக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. சான்றாகப் பொற்கால்

(கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி: 387), சூலக்கால் (தமிழ்ப் பேரகராதி:1569) ஆகியவற்றைக் கூறலாம். பொற்கால் என்பது பொன்னால் செய்யப்பட்ட மரக்காலையும், சூலக்கால் என்பது சூலம் பொறிக்கப்பட்ட மரக்காலையும் குறிக்கும். எனவே கால் எனும் அளவுக்கருவி மரத்தால் செய்யப்பட்டதால் மரக்கால் எனப் பெயர் பெற்றது எனலாம்.

பண்டையக் காலங்களில் மரத்தால் வடிவமைக்கப்பட்ட மரக்கால் இன்று பித்தளை, இரும்பு ஆகிய உலோகங்களால் வடிவமைக்கப்படுகிறது. இருப்பினும் மரக்கால் வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் வேறுபட்டாலும் பழங்காலத்தில் தமிழர்கள் மரத்தால் உருவாக்கப்பட்ட அளவுக் கருவி மரக்கால் என்று வழங்கிவருவதை தமிழரின் மரபு சார்ந்த பெயராவே அமைகிறது.

### இலக்கியம், நிகண்டு, அகராதிகளில் மரக்கால்

மரக்கால் எனும் சொல்லுக்கு முகத்தலளவைக் கருவி (சீவகசிந்தாமணி 2486:4), அளவைக்கால் (திவாகரம் 7:183), அம்பணம் (ஐங்குறுநூறு 43:1), குறுணி (கண்ணுடையம்மன்பள்ளு, 10:3), தூம்பு, குளகம், கச்சம் (சூடாமணி, 7:54), வள்ளம் (திருச்சங்கோட்டுப் பள்ளு, 839:2), கடன் (தமிழ்ப் பேரகராதி 664), தொள்ளை (தமிழ்ப் பேரகராதி 2103), ஒரு மரக்கால் (திருநெல்வேலி வழக்கு), உப்பளம் (பிங்கலம், 4:145) என இலக்கியங்களும் நிகண்டுகளும் அகராதிகளும் நமக்குச் சான்று பகர்கின்றன. சீவகசிந்தாமணி மரக்காலைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> **“உழுந்துபய றுப்பரிசி யப்பமருங் கலங்கள்**
> **கொழுந்துப்படக் கூப்பிநனி யாயிர மரக்கால்**
> **செழுந்துப்படச் செந்நெனிறைத்து”**
> ***(சீவகசிந்தாமணி 2486:1-3)***

எனும் பாடல் உழுந்து முதலாகத் தானியங்களைக் கலன்களில் நிறைத்தும் ஆயிரம் மரக்கால்களில் செந்நெல்லைக் குவித்தும் வைத்திருப்பதைக் குறிப்பிடுகின்றது.

### சமய வழிபாட்டிலும் வரலாற்றிலும் மரக்கால்

பல்லவர் காலத்திற்கு முன்பு மரக்கால் எனும் அளவையியல் கருவி அம்பணம் என்ற பெயரில் வழங்கப்பட்டது. இத்தகைய மரக்கால் பல்லவர் காலத்தில் பயன்பாட்டில் இருந்ததை இலக்கியங்களும் கல்வெட்டுகளும் நமக்குக் குறிப்புகள் தருகின்றன.

பல்லவர் காலத்திய சைவ, வைணவ சமயங்களின் புராண வரலாறும் மரக்காலைப் பற்றிக் குறிப்புகள் தருகின்றன. மரக்காணம் எனும் ஊரிலுள்ள பூமீஸ்வரர் திருக்கோயிலுள்ள சிவபெருமானின் பக்தன் ஒருவன் மரக்காலை சிவனாக பாவித்து வழிபாடு செய்துள்ளான். அதுவே பின்னர் சுயம்பு லிங்கமாக காட்சிக் கொடுத்தது என்றும் அதுவே தற்போதைய மரக்காணம் என்றும் புராணச் செய்திகள் குறிப்பிடுகின்றன. எனவே மரக்காலின் பயன்பாடு வழிபாட்டு மரபிலும் இருந்துள்ளது. அதேபோன்று உலகிற்கெல்லாம் படியளந்தவர் பெருமாள் என்பர். அவர் தானியங்களை மரக்கால் துணைக் கொண்டு படியளந்துள்ளார். ஆகவே சமய வழிபாட்டு முறைகளிலும் இந்த மரபுசார்ந்த மரக்காலின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது எனலாம்.

### தெய்வப்பெயர்களில் மரக்கால்

பிற்காலச் சோழர் ஆட்சியில் மரக்கால் செல்வாக்குப் பெற்ற அரச அளவுக் கருவிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இவர்களின் ஆட்சிக்காலத்தில் ஆடவல்லான், வீதி விடங்கன், திருச்சிற்றம்பலமுடையான், திருவண்ணாமலை, காளத்தியுடையான், தக்சிணமேருவிடங்கன் ஆகிய தெய்வப் பெயர்களைக் கொண்ட மரக்கால் வழக்கில் இருந்துள்ளது. இதில் ஆடவல்லான் என்பது தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள நடராஜப் பெருமானின் பெயர்களுள் ஒன்றாகும். எனவே இக்கோயிலில் நடராஜர் பெயரில் மரக்கால் இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மன்னர்கள் பெயரில் மரக்கால்

பிற்காலச் சோழர்கள் ஆட்சிக்காலத்தில் மன்னர்களின் பெயரிலே மரக்கால் வழக்கில் இருந்துள்ளது. குறிப்பாக இராசகேசரி, அருண்மொழித்தேவன் முதலான மன்னர்களின் பெயர்கொண்ட மரக்காலும் இருந்துள்ளது. அதேபோன்று அருமொழிநங்கை எனும் அரசியின் பெயர்கொண்ட மரக்காலும் பயன்பாட்டில் இருந்துள்ளது. இவற்றில் இராசராசனுக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர்களில் ஒன்றான இராசகேசரி எனும் பெயரில் இம்மரக்கால் அழைக்கப்படுகிறது. அருண்மொழித்தேவன் என்பது அவனது இயற்பெயரைக்கொண்ட மரக்காலாக விளங்கிற்று. வீரராசேந்திரச்சோழனின் மனைவியான அருமொழி நங்கை பெயரில் வழங்கும் மரக்கால் அருமொழிநங்கை மரக்காலாகும்.

தெய்வம், அரசர் மட்டுமல்லாது கடமைக்கால், நாட்டுக்கால், பஞ்சவாரக்கால் ஆகிய மரக்கால்கள் சோழர் ஆட்சியில் இருந்துள்ளன. இதில் கடமைக்கால் என்பது அரசு மக்களிடம் வரியாக தானியங்களை அளந்து பெறுவதற்காக உருவாக்கப்பட்ட மரக்காலாகும். நாட்டுக்கால் என்பது நாடு எனும் பிரிவுடைய பகுதியிலுள்ள மக்களிடம் தானியங்களை வரியாக அளந்து பெறுவதற்காக உருவாக்கப்பட்ட மரக்காலாகும். அதேபோன்று பஞ்சவாரக்கால் கிராம மக்களிடம் வரி வசூல் செய்யும் மக்களிடம் தானியங்களை அளந்து பெறுவதற்காக உருவாக்கப்பட்ட மரக்காலாகும். சோழர் ஆட்சிக்குப்பின் நாயக்கர் ஆட்சியில் பண்ணை மரக்கால் என வழக்கில் இருந்துள்ளது. இது ஒவ்வொரு பண்ணைகளிலும் கூலி அளப்பதற்கென்று தனியாக இம்மரக்காலைப் பயன்படுத்தியுள்ளனர்.

### மரக்காலின் வடிவமைப்பு

பழங்காலத்தில் தமிழர்கள் மூங்கில் மரம் கொண்டு முகத்தலளவுக் கருவிகளை உருவாக்கினர். பிற்காலத்தில் அக்கருவிகளை உருவாக்கக் குறிப்பாக தேக்கு மரங்களைப் பயன்படுத்தினர். இவ்வாறு மரக்காலை உருவாக்குவதற்கு மரத்தின் அடிப்பகுதியைத் தேர்வு செய்தனர். அவ்வடிப்பகுதி வட்ட வடிவில் முதிர்ச்சியடைந்ததைத் தேர்வு செய்து அவற்றைக் குடைந்து மரக்கால் போன்று வடிவமைத்துக்கொண்டனர்.

### மரக்கால் அளக்கும் முறைகள்

மரக்காலைக்கொண்டு தானியங்கள் அளக்கும் முறையில் ஒன்று மரக்காலின் மேல்மட்டத்திற்கு நெல் அளக்கும் முறை, மற்றொன்று மரக்கால் மட்டத்திற்கு மேல் இரு கைகளையும் கூப்பி நிறைந்து நெல் அளக்கும் முறை என இருமுறைகளைக் கையாளுகின்றனர். அதேபோன்று தானியங்ளை மரக்காலில் அளந்துக் கொட்டும்போது ஒன்று என கூறுவதற்குப் பதிலாக இலாபம் என்று அளப்பர். முதலில் அளக்கும் படிக்கு எண்ணை குறிப்பிடும் வழக்கம் பண்டையக் கால மரபில் இல்லை. அதேபோன்று எட்டு என்ற எண்ணையும் தானியங்கள் அளக்கும்போது வழக்கில் பயன்படுத்தாமல் அதற்கு அடுத்த எண்ணை குறிப்பிடுவர். இம்முறை இன்றளவும் பயன்பாட்டில் இருந்துவருகின்றது.

### அளவு முறைகள்

பண்டையக் காலத்தில் அஞ்ஞாலிக்கால், அறுநாழிக்கால், எண்ணாழிக்கால் என மரக்கால் அளவை முறையில் வேறுபாடுகள் இருந்துள்ளன. அவை முறையே ஐந்து படி, ஆறு படி, எட்டுப்படி ஆகிய அளவுகளைக் கொண்டதாகும். மரக்காலில் சின்ன மரக்கால், பெரிய மரக்கால் என வகையுண்டு. அவை முறையே இரண்டு படி, நான்கு படி என அளவுகளைக் கொண்டுள்ளது. மரக்காலின் அளவு முறை வேறுபாட்டை பின்வருமாறு காணலாம்;

சோழ நாட்டில் ஒரு மரக்கால் என்பது நாலு படியாகும். நாஞ்சில் நாட்டில் ஒரு மரக்கால் என்பது எட்டு படியாகும். பதக்கு என்பது இரண்டு மரக்காலாகும். இம் முகத்தலளவைப் பற்றி வேறு பெயர்களாக இருங்கரம், கடம் (தமிழ்ப் பேரகராதி:327, 658) எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்று மரக்கால் என்பது முக்குறுணியாகும். இவ்வளவைமுறை சோழ, பாண்டிய மண்டலங்களில் காணமுடிகிறது. தூணி என்பது நான்கு மரக்கால் என நாலடியார் (386) குறிப்பிடுகிறது. முகத்தளவையில் காடி என்னும் அளவுமுறை தூணியின் அளவை ஒத்ததுள்ளது என்பதை சோழர்கள் என்ற நூலின் வாயிலாக அறியமுடிகிறது (கே.வி. இராமன், சோழர்கள் : 816). பறை என்பது சோழர் பகுதியில் ஆறு மரக்காலைக் குறிப்பிடுகிறது. கோணி, மூடம் என்பது எட்டு மரக்கலாகும் (தமிழ்ப் பேரகராதி 1182, 3319). ஒரு கலமானது 12 மரக்காலாகும். மேலும் கோட்டை, மூட்டை, சலகை, கண்டி, உறை, கரிசை ஆகியவை முறையே 21, 24, 24, 48, 60, 400 மரக்கால்களைக் கொண்டவையாகும்.

## மரக்காலின் பயன்பாடு

மன்னர் ஆட்சிக்காலத்தில் நிலத்திற்குரிய வரியைத் தானியங்களாகக் கொடுத்தனர். மக்கள் மரக்கால் எனும் அளவுக் கருவியால் தானியங்களை அளந்து வரியாகச் செலுத்தினர். இவ்வாறு வசூலிக்கப்பட்டத் தானியங்களை மன்னர்கள் அவர்களிடம் பணிபுரிந்த பணியாளர்களுக்குக் கூலியாகக் கொடுத்தனர். மக்கள் அரசுக்கு வரியாகச் செலுத்தியது போக மீதமுள்ள தானியங்களைத் தங்களிடம் பணிபுரிந்தக் கைவினைஞர்களுக்கும், கூலித்தொழிலாளர்களுக்கும் கூலியாக வழங்கியுள்ளனர். சமூகத்தில் அன்றைக்கு அனைத்து நிலைகளிலும் மரக்காலின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியது என்பது இதன் வாயிலாக புலனாகிறது. அவ்வாறான மரக்கால் இன்றளவும் தானியங்களைக் கொடுப்பதற்கும், பெறுவதற்கும் என இரு நிலைகளிலும் பயன்பட்டு வருவதைக் காணும்போது இனிவரும் காலங்களிலும் மரக்காலின் பயன்பாடு, அதன் மரபுசார்ந்த முக்கியத்தும் நெடுங்காலங்களாக நிலைத்து நிற்கும் என்பதே உண்மை.

## நம்பிக்கைகளிலும், சடங்கு முறைகளிலும் மரக்கால்

வேளாண்மையில் மரக்கால் என்பது நம்பிக்கை சார்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. நெல் அறுவடையின்போது தூற்றிக் குவித்த நெற்பொலியில் மரக்காலால் முதலில் நெல்லை அளந்து தெய்வத்திற்காக எடுத்து வைப்பர். அது நம்பிக்கை சார்ந்ததாகும். இதற்குப்பிறகு நெல் அளக்கும்போது ஒன்று என்று கூறாமல் இலாபம் என்று கூறி இரண்டு, மூன்று என கூறுவர். அவ்வாறு சொல்லி அளந்தால்தான் தானியங்கள் பெருகும் என்பது சமூகத்தில் மக்களின் நம்பிக்கை சார்ந்த பண்பாடாக அமைகிறது. அதேபோன்று அறுவடையின் ஏழாம் கடைசிநாள் நெல்மேல் மரக்கால் வைத்து அதில் விளக்கேற்றி வழிபாடு செய்வர். இது நல்லவிதமாக அறுவடை முடிந்தது என்பதை உணர்த்துவதாக அமைகிறது.

## நிறைவுரை

மனிதனின் அன்றாட வாழ்வில் மரக்கால் எவ்வாறு பயன்பட்டது என்பதை இலக்கியங்கள், நிகண்டுகள், அகராதிகள், கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. மரக்கால் என்பது பழந்தமிழர்களின் வாழ்வியல் முறையிலும், வேளாண்மையிலும் இன்றியமையாத ஒன்றாக இருந்துள்ளது என்பது புலனாகிறது. தற்காலத்திலும் அதன் பயன்பாடு, தேவை இருந்து வருகின்றது என்பதை நம்பிக்கைச் சார்ந்தச் சடங்கு முறைகள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகின்றது. ஆகவே மரக்கால் எனும் தமிழரின் மரபு

சார்ந்த முகத்தளவைக்கருவின் தேவையும், பயன்பாடும் எதிர்வரும் காலங்களிலும் இருக்கும் என்றும், இது அழியாதத் தொன்மைத் தமிழரின் மரபுச் செல்வமாக இருந்து வரும் என்பதே திண்ணம்.

### மேற்கோள் நூல்கள்


1. இராமன், கே.வி. *சோழர்கள் புத்தகம்-2*, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,.
2. கவிஞர் கந்தசாமி, ந. (1967). *செங்கோட்டுப் பள்ளு*, மல்லசமுத்திரம், பழகு தமிழ்ப் பதிப்பகம்.
3. கோவிந்தராசன், சி. (1987). *கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி*. மதுரை. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
4. சாமிநாதையர், வே. (1969). *சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும்*, சென்னை, கபீர் அச்சுக்கூடம்.
5. சேந்தன் திவாகரம், (2004). *பிங்கலம்*. சென்னை, சாந்தி சாதனா வெளியீடு.
6. சேந்தன் திவாகரம். (2004) *சூடாமணி*. சென்னை, சாந்தி சாதனா வெளியீடு.
7. சோமசுந்தரனார். பொ.வே. (1961). *ஐங்குறுநூறு*. சென்னை, கழக வெளியீடு.
8. தீனதயாளு நாயுடு, டி. (1943). *நாலடியார் (உரை)*. சென்னை, பி.நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்.
9. நாட்டரசன்கோட்டை நகரத்தார். (1938). *கண்ணுடையம்மன் பள்ளு*. சிவகங்கை, ஸ்ரீ ராஜேஸ்வரி பிரஸ்.
10. தமிழ்ப் பேரகராதி I - VI. (1982). சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம்.
11. பூமிநாதன், த. (2000). *எட்டையபுரப் பள்ளு*. சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.